# லங்கா சோல்ட் லிமிடெட்

# வெற்றிடங்கள்

SLS தரச் சான்றிதழ் மற்றும் ISO 9001; ISO 22000 சர்வதேச தர உத்தரவாதகங்களைப் பெற்ற இலங்கையின் முதன்மையான உற்பத்தியாளரான லங்கா சோல்ட் லிமிடெட் நிறுவனம் கீழ் குறிப்பிடப்பட்ட வெற்றிடமாக உள்ள பதவிகளுக்காக தகுதி பெற்றவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்/ அமைப்புகளில் குறித்த துறை தொடர்பில் அனுபவம் இருத்தல் வேண்டும் என்பதோடு, அவர் செயற்பாடு மற்றும் முன்முயற்சி மற்றும் அறிவுக் கூர்மையை பெற்றவராக இருத்தல் வேண்டும்.

**நியமன தன்மை**

பணியாளர் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு உரித்துடைய நிரந்தர நியமனம் என்பதோடு ஓர் ஆண்டு தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். லங்கா சோல்ட் லிமிடெட் நிறுவனத்தில் நிரந்தர அடிப்படையில் பணியமர்த்தப்படுபவர்களுக்கு உரித்துடைய நன்மைகள் அனைத்தும் இந்தப் பதவிக்கு உரித்தாகும்.

**வேறு:**

**அனைத்து விண்ணப்பதாரர்களும்**,

- இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
- பதவியின் கடமைகளை நன்றாக செய்வதற்கு உடல் மற்றும் உளத் தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.
- சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.
- லங்கா சோல்ட் லிமிடெட் நிறுவனத்தின் கீழ் நடத்தப்படும் மஹலேவாய, புன்தல லேவாய மற்றும் பலடுபான லேவாய ஆகிய எந்த ஒரு இடத்திலும் தேவைக்கு அமைய பணியாற்றுவதற்கு கடப்பாடு பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:**

- 22 வயதுக்கு குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்காக உயர் வயதெல்லை பொருந்தாது.
- உறவினர் அல்லாத பரிந்துரையாளர்கள் இருவரின் பெயர் மற்றும் முகவரிகளுடன் விண்ணப்பம் மற்றும் முழுமையான சுயவிபரக்கோவையை 2025 மே மாதம் 16 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் கீழுள்ள முகவரிக்கு அனுப்பவும். விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.
- இந்த பதவியை நிரப்பும் அதிகாரம் பணிப்பாளர் சபை வசமானது.

**முகாமையாளர் - இரசாயனவியலாளர் தரக் கட்டுப்பாடு MM 1-1 (பதவி** 01)

கீழ் குறிப்பிடப்பட்ட கடமையின் பிரதான பணியை மேற்கொள்வதற்கு பிரதிப் பொது முகாமையாளர், உதவி பொது முகாமையாளர் மற்றும் சிரேஷ்ட உற்பத்தி முகாமையாளருக்கு உதவுதல்.

**பிரதான பணி:**

1. ஆய்வுகூட பராமரிப்பு மற்றும் உப்பு தயாரிப்பு மற்றும் உப்பு நீர் சோதனை மேற்கொள்ளல்.
2. ஆய்வுகூடத்தை நடத்திச் செல்லல் மற்றும் வழங்க முடியுமான தரத்திற்கு அமைய உப்பு தயாரிப்பு மற்றும் உப்பு நீர் சோதனை.
3. அனைத்து உப்பு இடுதல்கள் உப்பு தயாரிப்பு மற்றும் தயாரிப்பு செயற்பாடுகளுக்காக தரமான நிலையில் நடத்திச் செல்வதை உறுதி செய்தல்.
4. பிரிவுக்கு தலைமை வகித்தல்.
5. நிலையான மாதிரிகளை சோதித்து தேவையான தர உத்தரவாதத்தை உறுதி செய்தல்.
6. தொழிற்சாலையுடன் நெருங்கி செயற்படல் மற்றும் ஒரு உப்புப்பாத்தி தயாரிப்பு செயற்பாடுகளை முறையான தரத்துக்கு அமைய மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

**தேவையான தகைமை மற்றும் அனுபவம்**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**:-

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகரித்த பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து பெற்றுக்கொண்ட இரசாயனவியல், பௌதீகவியல், ஆய்வுகூட தொழில்நுட்ப விஞ்ஞானம் தொடர்பில் பட்டம் அல்லது அதற்கு இணையான துறை ஒன்றில் பெற்றுக்கொண்ட பட்டத்துடன், பட்டம் பெற்ற பின் உப்பு அல்லது உணவு உற்பத்தி துறையில் அரச, அரச கூட்டுத்தாபனம், சபை, சட்டரீதியான நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் பதவிக்கு தொடர்புடைய துறையில் குறைந்தது ஓர் (01) ஆண்டு தகைமைக்கு பின்னரான சேவை அனுபவத்தை பெற்றிருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள்:-**

1. மேல் குறிப்பிடப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளை பெற்றிருத்தல்.

**அல்லது**

2. லங்கா சோல்ட் நிறுவனத்தின் JM 1-1 கனிஷ்ட நிறைவேற்று பிரிவின் பதவிக்கு தொடர்புடைய துறையில் ஐந்து (05) ஆண்டுகள் பணி அனுபவம் இருத்தல்.

**சம்பள அளவு:-** MM 1-1 ரூபா 53,175- 10x1375+15x1910 = 96,325/-

**ஆரம்பப் படி:** ரூபா 53,175/-

**மேலதிக கொடுப்பனவு:-** (வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு -17800 + வருகை ஊக்கக் கொடுப்பனவு மாதாந்த வருகை கொடுப்பனவு அளவுக்கு அமைய – 2000 + மாதாந்த ஊக்கக் கொடுப்பனவு – 5000 + விசேட கொடுப்பனவு 5000)

**கனிஷ்ட நிறைவேற்று உதவியாளர் இயந்திர பொறியியல் / மின் JM 1-1 (பதவி 05)**

**பிரதான பணி**

லங்கா சோல்ட் நிறுவனத்தின் உற்பத்தி இலக்குகளை பூர்த்தி செய்வதற்கு உதவி பொது முகாமையாளர் மற்றும் உற்பத்தி மற்றும் பொறியியலாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் தேவையான சிவில், இயந்திரவியல், தொழில்நுட்ப, தொழில்முறை மற்றும் மின் துறைகளின் இயந்திர உபகரண கட்டமைப்பை பராமரித்தல், முன்னெடுத்துச் செல்லல் மற்றும் தேவையான சீரமைப்பு மற்றும் திடீர் செயலிழப்புகளுக்கு தீர்வு கண்டு உற்பத்திக்கு இடையூறு இல்லாத வகையில் செயற்படல் மற்றும் உதவி பணிக் குழுவை மேற்பார்வையிடல், அவர்களுக்கு வழிகாட்டல் மற்றும் தொழில் முன்னேற்றம் சார்ந்த செயற்பாடுகள்.

**தேவையான தகைமை மற்றும் அனுபவம்**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்:-**

1. பதவி சார்ந்த விடயப்பரப்பு ஒன்றில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் ஒன்று பதவிக்கு தொடர்புடைய துறையில் பெற்றிருத்தல்.
2. மூன்றாம்நிலைக் கல்வி மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழில் பயிற்சி நிறுவனம் ஒன்றில் இருந்து வழங்கப்பட்ட தேசிய தொழில் தகைமை (NVQ) ஏழாவது (07) தரத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல்.
3. மூன்றாம்நிலைக் கல்வி மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழில் பயிற்சி நிறுவனம் ஒன்றில் இருந்து வழங்கப்பட்ட தேசிய தொழில் தகைமை (NVQ) ஆறாவது (06) தரத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல்.

**மற்றும்**

தகைமையை பெற்ற பின், அரசு, அரச கூட்டுத்தாபனம், சபை, சட்டரீதியான நிறுவனம் ஒன்றில் குறைந்தது குறித்த துறையில் ஐந்து (05) ஆண்டுகள் அனுபவம் ஒன்றை பெற்றிருத்தல்.

4. மூன்றாம்நிலைக் கல்வி மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழில் பயிற்சி நிறுவனம் ஒன்றில் இருந்து வழங்கப்பட்ட தேசிய தொழில் தகைமை (NVQ) ஐந்தாம் (05) தரத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல்.

**மற்றும்**

தகைமையை பெற்ற பின், அரச, அரச கூட்டுத்தாபனம், சபை, சட்டரீதியான நிறுவனம் ஒன்றில் குறைந்தது குறித்த துறையில் பத்து (10) ஆண்டுகள் அனுபவம் ஒன்றை பெற்றிருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள்**:

5. மேலுள்ள வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல்.
6. முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் அல்லாத (MA1) சேவை நிலையின் IIஆம் தரம் சார்ந்த துறையிலான பதவி ஒன்றில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவை காலம் ஒன்றை பூர்த்தி செய்திருத்தல்.
7. முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப (MA2) சேவை நிலையின் IIஆம் தரம் சார்ந்த துறையிலான பதவி ஒன்றில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவை காலம் ஒன்றை பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பள அளவு:-** ரூபா 42,600- 10x755+18x1,135 = ரூபா 70,580.00

**ஆரம்பப் படி:** ரூபா 42,600.00

**மேலதிக கொடுப்பனவு:-** (வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு - 17,800 + வருகை ஊக்கக் கொடுப்பனவு மாதாந்த வருகை கொடுப்பனவு அளவுக்கு அமைய – 2000 + மாதாந்த ஊக்கக் கொடுப்பனவு – 5000 + விசேட கொடுப்பனவு 5000)

**தலைவர்,**
**லங்கா சோல்ட் லிமிடெட்,**
**தொலைபேசி: 047-2037300**